நாளை உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பதவிக்கான மறைமுகத் தேர்தல்

சென்னை, அக். 20: 9 மாவட்டங்களில் மாவட்ட ஊராட்சித் தலைவர், துணைத் தலைவர், ஒன்றியக் குழு தலைவர், துணைத் தலைவர், கிராம ஊராட்சி துணைத்தலைவர் உள்ளிட்ட பதவிகளுக்கான மறைமுகத் தேர்தல் வெள்ளிக்கிழமை (அக்.22) நடைபெற உள்ளது.

விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர்,காஞ்சிபுரம்,செங்கல்பட்டு, திருநெல்வேலி, தென்காசி ஆகிய 9 மாவட்டங்களுக்கான ஊரக உள்ளாட்சித் தேர்தல் அக்டோபர் 6, 9-ஆம் தேதிகளில் இரண்டு கட்டங்களாகவும், 28 மாவட்டங்களில் காலியாக உள்ள ஊரக உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கான தேர்தல் அக்டோபர் 9-ஆம் தேதியும் நடைபெற்றது. தேர்தல் முடிவுகள் அக்டோபர் 12-ஆம் தேதி அறிவிக்கப்பட்டன. இந்தத் தேர்தலில் 2 மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள், 5 ஒன்றியக் குழு உறுப்பினர்கள், 137 கிராம ஊராட்சித் தலைவர்கள், 3,221 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் போட்டியின்றித் தேர்தெடுக்கப்பட்டனர்.

151 மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள், 1,415 ஒன்றியக் குழு உறுப்பினர்கள், 2,865 கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் 19,964 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றனர்.

தேர்தலில் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மற்றும் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள் பெரும்பாலானோர் தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவித் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் முன்னிலையில் புதன்கிழமை (அக்.20) பதவிப்பிரமாணம் செய்து பதவியேற்று கொண்டனர்.

நாளை மறைமுகத் தேர்தல்: 9 மாவட்டங்களில் மாவட்ட ஊராட்சித் தலைவர், துணைத் தலைவர், ஒன்றியக் குழு தலைவர்,துணைத் தலைவர், கிராம ஊராட்சி துணைத் தலைவர் உள்ளிட்ட பதவிகளுக்கான மறைமுகத் தேர்தல் வெள்ளிக்கிழமை(அக்.22) நடைபெற உள்ளது.

இந்தத் தேர்தலில் பங்கேற்கும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பதவிப் பிரமாணம் எடுத்திருக்க வேண்டும். புதன்கிழமை பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளாதவர்கள் மறைமுகத் தேர்தல் நடவடிக்கை தொடங்கும் முன்பாக பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறும் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளாதவர்கள் புதன்கிழமையில் இருந்து அதாவது அக்டோபர் 20-ஆம் தேதியில் இருந்து 3 மாதங்களுக்குள்ளாகவோ அல்லது முதல் மூன்று உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்துக்குள்ளாகவோ பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டும் என மாநிலத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் டெங்கு பாதிப்பு கட்டுப்பாட்டில் உள்ளது

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

சென்னை, அக். 20: தமிழகத்தில் டெங்கு பாதிப்பு கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும், தற்போது 340 பேர் மட்டுமே சிகிச்சையில் இருப்பதாகவும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

சென்னை சைதாப்பேட்டை சட்டப்பேரவைத் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து 174-ஆவது வார்டு மடுவங்கரை, பாரதி நகர், பாரதி தெருவில் ரூ.30 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள நவீன உபகரணங்களுடன் கூடிய உடற்பயிற்சிக்கூடத்தை அமைச்சர் மா.சுப்பிரமணியன் புதன்கிழமை திறந்து வைத்து உடற்பயிற்சி செய்தார். சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர் திருமுருகன் மற்றும் திமுக நிர்வாகிகள் அப்போது உடன் இருந்தனர்.

அதைத் தொடர்ந்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

உள்ளாட்சி நிர்வாகம், காவல் துறை மற்றும் சுகாதாரத் துறைகளின் அலுவலர்கள் பொதுமக்கள் இடையே கரோனா விழிப்புணர்வை தொடர்ந்து ஏற்படுத்தி வருகின்றனர். கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகின்றனர். இந்த விதிமுறைகளைக் கடைப்பிடிக்காதவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது.

பொதுமக்கள் தங்கள் உயிர்களைக் காப்பதற்கு முகக்கவசம் அணிய வேண்டும். கரோனா விதிமுறைகளை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும்.

பிரிட்டனில் நாள்தோறும் 40 ஆயிரம் பேருக்கு கரோனா தொற்று பரவி வருகிறது. சிங்கப்பூரில் குறைந்து பிறகு கூடிக்கொண்டே செல்கிறது. எனவே உலக நாடுகள் எல்லாம் அச்சப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்தக் காலத்தில் கட்டுப்பாட்டு விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதை கடமையாகக் கொள்ள வேண்டும். தமிழகத்தில் இதுவரை முதல் தவணை தடுப்பூசியை 68 சதவீதத்தினரும், இரண்டாவது தவணை தடுப்பூசியை 25 சதவீதத்தினரும் செலுத்திக் கொண்டுள்ளனர். இது போதுமானதல்ல. ஒட்டுமொத்த மக்கள் தொகையில் 18 வயதைத் தாண்டியவர்கள் எல்லோருக்கும் தடுப்பூசி போட வேண்டும். இரண்டாவது தவணை தடுப்பூசி போட வேண்டியவர்கள் லட்சக்கணக்கில் உள்ளனர்.

இரண்டாவது தவணை தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதுதான் கவலையளிக்கக் கூடிய செய்தியாகும். இரண்டாவது தவணை தடுப்பூசி யாருக்கெல்லாம் செலுத்திட வேண்டுமோ அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களுக்கு செலுத்த வேண்டுமென்று முதல்வர் அறிவுறுத்தியுள்ளார். வரும் சனிக்கிழமை நடைபெறுகிற ஆறாவது சிறப்பு முகாமில் 25 லட்சம் பேர் இரண்டாவது தவணை தடுப்பூசியை செலுத்திக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. 48 லட்சம் தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளன.

வரும் சனிக்கிழமை பொதுமக்களின் வசதிக்காக 50 ஆயிரம் முகாம்கள் மூலம் கோவேக்ஸின், கோவிஷீல்ட் தடுப்பூசிகள் செலுத்தப்பட உள்ளன.எனவே இம்முகாம்களில் தடுப்பூசிகளை செலுத்திக் கொள்ள வேண்டும்.

டெங்கு காய்ச்சல்: டெங்கு காய்ச்சல் இப்போது கட்டுப்பாட்டில் இருக்கிறது. 340 பேர் மட்டுமே சிகிச்சையில் உள்ளனர். தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் சுகாதார அலுவலர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர். வீடுகளுக்குச் சென்று அங்கு டெங்கு வராமல் தடுப்பதற்காக தேங்கி இருக்கிற தண்ணீரை அகற்றுவது, தினந்தோறும் கொசு மருந்து தெளிப்பது, புகை மருந்து அடிப்பது, கொசு முட்டைகளை அழிப்பது போன்ற செயல்களை செய்து வருகின்றனர் என்றார் அவர்.

சென்னை சைதாப்பேட்டை சட்டப்பேரவைத் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து மடுவங்கரை பாரதி தெருவில் ரூ.30 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள நவீன உபகரணங்களுடன் கூடிய உடற்பயிற்சிக் கூடத்தை புதன்கிழமை திறந்து வைத்து உடற்பயிற்சி செய்த மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன்.

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்: முன்னேற்பாடு பணிகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும்

மாநிலத் தேர்தல் ஆணையர் அறிவுறுத்தல்

சென்னை, அக். 20: நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் முன்னேற்பாடு பணிகளை மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் விரைந்து மேற்கொள்ள வேண்டும் என மாநிலத் தேர்தல் ஆணையர் வெ.பழனிகுமார் அறிவுறுத்தி உள்ளார்.

தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவற்றுக்கான நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் முன்னேற்பாடு பணிகளில் மாநிலத் தேர்தல் ஆணையம் ஈடுபட்டு வருகிறது. இதன் முதற்கட்டமாக நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் பயன்படுத்தப்படும் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களைக் கையாள்வது குறித்து மாவட்ட முதன்மைப் பயிற்றுநர்களுக்கு சென்னையில் அண்மையில் பயிற்சி அளிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, மாநிலத் தேர்தல் ஆணையர் வெ.பழனிகுமார் தலைமையில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் குறித்து அனைத்து மாவட்ட ஆட்சியர்களுடன் காணொலிகாட்சி வாயிலாக ஆலோசனைக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

இதுகுறித்து மாநிலத் தேர்தல் ஆணைய அலுவலர்கள் கூறுகையில், இக்கூட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகளின் விவரம், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவித் தேர்தல் நடத்தும் அலுவலர்களை நியமிப்பது, வாக்குச் சாவடிகள் அமைப்பது, வாக்குப் பதிவு இயந்திரங்களின் இருப்பு, வாக்காளர் பட்டியல் தயாரித்தல், மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்கு பயிற்சி அளித்தல், வாக்குச் சாவடி மற்றும் வாக்கு எண்ணிக்கை மையங்களில் கரோனா பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றுதல் உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டது.

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலை அமைதியான முறையில் நடத்திடும் வகையில் அனைத்து முன்னேற்பாடு பணிகளையும் அந்தந்த மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் விரைந்து மேற்கொள்ள வேண்டும் என மாநிலத் தேர்தல் ஆணையர் வெ.பழனிகுமார் அறிவுறுத்தினார் என்று தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில், மாநிலத் தேர்தல் ஆணைய செயலர் சுந்தரவல்லி, பேரூராட்சிகளின் ஆணையர் ஆர்.செல்வராஜ், நகராட்சி நிர்வாக ஆணையர் பா.பொன்னையா, சென்னை மாநகராட்சி துணை ஆணையர் விஷுமகாஜன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கரோனா சிகிச்சையில் இருப்போர் எண்ணிக்கை 14,058-ஆகக் குறைந்தது

சென்னை, அக்.20: தமிழகத்தில் கரோனா சிகிச்சையில் இருப்போர் எண்ணிக்கை 14,058-ஆகக் குறைந்துள்ளதாக மக்கள் நல்வாழ்வுத் துறை தெரிவித்துள்ளது. இதனிடையே, புதன்கிழமை மேலும் 1,170 பேர் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதில் அதிகபட்சமாக சென்னையில் 148 பேருக்கும், கோவையில் 141 பேருக்கும், செங்கல்பட்டில் 93 பேருக்கும் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மாநிலத்தில் இதுவரை கரோனா வால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 26 லட்சத்து 90,633-ஆக அதிகரித்துள்ளது.

இதனிடயே, நோய்த் தொற்றிலிருந்து புதன்கிழமை 1,418 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதையடுத்து மாநிலத்தில் இதுவரை கரோனாவிலிருந்து விடுபட்டோரின் எண்ணிக்கை 26.40 லட்சத்தைக் கடந்துள்ளது.

மற்றொருபுறம், தமிழகத்தில் கரோனா பாதிப்புக்குள்ளாகி மேலும் 20 பேர் பலியானதை அடுத்து மாநிலம் முழுவதும் இதுவரை நோய்த் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 35,948-ஆக அதிகரித்துள்ளது.

ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் ஃபைனான்ஸ் கம்பெனி லிட்

வாலாஜாபாத் கிளை — வாகனங்கள் விற்பனை

வ.எண்.	வாகன எண்	வாகன விவரம்	வருடம்
1	TN21BF1577	BAJAJ RE MAXIMA DIESEL-P	2018
2	TN22BB1549	MAHINDRA TOURISTER FBV-P	2008
3	TN21K5961	MAHINDRA TOURISTER FBV-P	2006

தொடர்புக்கு : 9994269236

IDBI BANK

சென்னை, செங்கல்பட்டு வங்கி அலுவலகத்திற்கு இடம் தேவை

வங்கி தனது அலுவலக செயல்பாடுகளுக்காக செங்கல்பட்டில் 1500 சதுரடி வரை உள்ள இடத்தை நீண்ட கால குத்தகைக்கு எடுக்க விரும்புகிறது. பொருத்தமான இடத்தை வைத்திருக்கும் விருப்பமுள்ள நபர்கள் இந்த விளம்பரம் வெளியான 10 நாட்களுக்குள் மண்டல மேலாளர், சென்னை மண்டல அலுவலகத்திற்கு விண்ணப்பிக்கவும். அக்டோபர் 31, 2021 அன்று மாலை 6.00 மணிக்குள் வந்து சேரும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும். விவரக்குறிப்பு மற்றும் இதர விவரங்களை எங்கள் வலைதளமான www.idbibank.in இல் அறிவிப்புகள் டெண்டர் பிரிவிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது எங்களின் ஏதாவது கிளையில் பெற்று கொள்ளலாம்.

செங்கல்பட்டு — Sd/
அக்டோபர் 21, 2021 — தலைமை பொது மேலாளர் - சென்னை மண்டலம்

பொது அறிவிப்பு

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை, பணப்பாக்கம், கதவு எண். 249/250-ல் இயங்கி வரும் M/s. Writer Business Services Pvt. Ltd.,-ல் துணை மேலாளராக பணிபுரியும் ஜெயபாலன் அவர்களின் குமாரர் திரு.பிரணவம் ஆகிய என் கட்சிக்காரரின் அறிவுறுத்தலின்படி கொடுக்கப்படும் அறிவிப்பு என்னவென்றால்,

என் கட்சிக்காரர் Edelweiss Housing Finance Company-ல் அடமானமாக பெறப்பட்டு எனது கட்சிக்காரரிடம் பாதுகாப்பிற்காக கொடுக்கப்பட்ட அசல் ஆவணங்களான (1) 3063/2013 எண் கொண்ட MOD (Memorandum of Deposit of Title Deed) (2) 1286/2013 எண் கொண்ட அசல் கிரைய ஆவணம், (3) 436/2009 எண் கொண்ட அசல் கிரைய ஆவணம், (4) 34 /1957 எண் கொண்ட அசல் உயில் ஆவணம், (5) 27/1971 எண் கொண்ட அசல் உயில் ஆவணம் ஆகிய ஆவணங்களை தொலைத்து விட்டார். மேலும் இது தொடர்பாக திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு புகார் மனு CSR No.490/2021 என்ற எண்ணாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த ஆவணத்தை வேறு யாரேனும் வைத்திருந்தாலோ அல்லது யாரேனும் ஆட்சேபனை தெரிவிக்க விரும்பினாலோ இந்த அறிவிப்பு கண்ட 15 நாட்களுக்குள் கீழ்க்கண்ட முகவரியில் ஒப்படைக்கவும்.

J. SALEITH FRANKLIN RAJ, B.B.A., B.L., Advocate,
41,42, Kailash Arcade, Heber Road, Beema Nagar, Trichirappalli - 01.
Date : 20.10.2021 — Ph : 96555 22329. mail : supremelawsindia@gmail.com

பஞ்சாப் & சிந்த் வங்கி
(ஓர் இந்திய அரசு நிறுவனம்)
கிளை அலுவலகம்:IBD திருப்பூர்
118, காமாட்சியம்மன் கோவில் தெரு, திருப்பூர்-641 604. போன்:0421-2248367
மின்னஞ்சல்:t0691@psb.co.in

டேவணித் தொகையும் ஆவணங்களும் 09.11.2021, மாலை 04.00 மணி-க்குள் சமர்ப்பிக்க வேண்டியபடியான அசையா சொத்தை மின்னணு ஏல விற்பனை மூலம் விற்பதற்கான விலைக்குறிப்பீட்டாளர்களுக்கான பொது அறிவிப்பு

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் & கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம், மற்றும் பிரிவுகளின் கீழ் விற்பனை.

கடன்தாரர், M/s.விசாகா அப்பேரல்ஸ், (பங்குதாரர்கள் - திரு.பூநீனிவாசன் மற்றும் திருமதி.கற்பகம் பூநீனிவாசன்) ஆகியோர்களிடமிருந்து வங்கிக்கு வரவேண்டிய பாக்கித்தொகையான ரூ.3,27,90,718.20 (ரூபாய் மூன்று கோடியே இருபத்தேழு இலட்சத்து தொண்ணூறாயிரத்து எழுநூற்று பதினெட்டு மற்றும் பைசா இருபது மட்டும்) மற்றும் 30.09.2021-வரையிலான வட்டி, கட்டணங்கள் மற்றும் இதர செலவுகள் உட்பட, 01 அக்டோபர் 2021-முதலான வட்டி மற்றும் செலவுகளையும் சேர்த்து வசூலிக்கும் பொருட்டு 2002-ம் ஆண்டு SARFAESI சட்டத்தின் கீழ் அதிகாரபூர்வ அதிகாரியால் 01.12.2020-அன்று அடையாளப்பூர்வ சுவாதீனம் எடுக்கப்பட்ட, பஞ்சாப் & சிந்த் வங்கியின் அடமானத்திலுள்ள அசையா சொத்துக்களை, https://www.bankeauctions.com மூலமாக மின்னணு முறையில் "உள்ள இடத்தில் உள்ளவாறான" மற்றும் "உள்ள நிலையில் உள்ளவாறான" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படுவதற்கான விண்ணப்பங்கள், 09.11.2021-அன்று மாலை 04.00 மணிக்கு முன்னதாக வரவேற்கப்படுகின்றன.

அசையா சொத்து விபரம்

சொத்தின் விபரம் (இருக்கும் விபரங்களின் படி)	குறைந்த பட்ச விலை / EMD (ரூ.இலட்சத்தில்)	விலைக் குறிப்பீட்டுத் தொகை வசூலித்தல் கோரும் அளவு	சொத்தினை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் / மின்னணு ஏல தேதி மற்றும் நேரம்
சென்னை, மடிப்பாக்கம், மகாலக்ஷ்மி நகர், பாரதியார் சாலை, சர்வே எண்.150/2 பகுதி, 150/2A1B, மனை எண்கள்: 7 மற்றும் 8, கதவு எண்.2/1510-ல் உள்ள 4790 சதுர அடி அளவிலான நிலத்தில் குடியிருப்பு கட்டிடம் மற்றும் அதனுடன் இணைந்த பகுதிகளும் திருமதி.கற்பகம் ஸ்ரீனிவாசன் அவர்கள் பெயரிலுள்ளது. சொத்தின் எல்லைகள்: வடக்கில்: மனை எண்.6, கதவு எண்.2/1509, தெற்கில்: மனை எண்.18, கதவு எண்.2/1511 (வசந்த இல்லம்), கிழக்கில்: 30 அடி அகல பாரதியார் சாலை, மேற்கில்: காலி நிலம் மற்றும் ஜம்போ காமாக்ஷி அபார்ட்மெண்ட்.	குறைந்த பட்ச விலை: ரூ.172.44 இலட்சம் EMD:ரூ.17.24 இலட்சம்	ரூ.0.50 இலட்சம்	சொத்தினை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் 08.11.2021 மின்னணு ஏல தேதி மற்றும் நேரம்: 10.11.2021 காலை 11.00 மணி முதல் மாலை 04.00 மணிவரை

*குறிப்பு: மேற்குறிப்பிட்ட சொத்தின் அளவை, சொத்து அமைந்துள்ள இடத்திலும் மற்றும் வருவாய் அதிகாரிகளின் ஆவணங்களிலும் விலைக்குறிப்பீட்டாளர்கள், ஏலத்தில் கலந்து கொள்வதற்கு முன்பாக சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

விதிகள் மற்றும் நிபந்தனைகள்:
மேலும் விதிகள் மற்றும் நிபந்தனைகளை வங்கியின் இணையதளமான www.psbindia.com-ல் காணவும்.

Security Interest (Enforcement) Rule 9-ன் கீழ் வெளியிடப்படும் 15 நாட்கள் விற்பனை அறிவிப்பு

கடன்தாரர்களுக்கும் ஜாமீன்தாரர்களுக்கும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில் ஏலத் தேதிக்கு முன்னதாக மேலே குறிப்பிட்டுள்ள பாக்கித்தொகை, நாளது தேதி வரையிலான வட்டி மற்றும் இதர செலவுகளை சேர்த்து செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தவறும் பட்சத்தில் சொத்தானது ஏலத்தின் மூலம் விற்கப்படும் மற்றும் பாக்கித் தொகை (ஏதேனும் இருப்பின்) மற்றும் இதர செலவுகள் வசூலிக்கப்படும்.

தேதி:20.10.2021
இடம்:திருப்பூர் — அதிகாரபூர்வ அதிகாரி

SUNDARAM HOME
பதிவு அலுவலகம் : எண். 21, பட்டுலோஸ் சாலை சென்னை – 600 002
கார்ப்பரேட் அலுவலகம் : 46, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600014 தொலைபேசி:044-2851 5267
கிளை அலுவலகம் : பழைய எண். 1, புதிய எண். 1, 2 வது தளம், கிருஷ்ணன் கோவில் தெரு, ருட்லர்ஸ் லேன், மண்ணடி, (துறைமுகம் காவல் நிலையம் எதிரில்) சென்னை-600 001
தொலைபேசி : 044 - 2524 1099

விற்பனை அறிவிப்பு

இப்பவும், பிணைச்சொத்து பாதுகாப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 ன் கீழான "சுந்தரம் ஹோம் பைனான்ஸ் லிமிட்டெட்" (முன்பு "சுந்தரம் BNP பரிபாஸ் ஹோம் ஃபைனான்ஸ் லிமிட்டெட்" என்று அறியப்படுவது) ன் அதிகாரப்பூர்வ அலுவலராகவும், மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(12) உடன் படிக்க பிரிவு 13(2)'' ன் படியும், தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், கடன்தாரருக்கு கோரிக்கை அறிவிப்பு மூலம் அழைப்பு விடுத்து, அதில் குறிப்பிட்டுள்ள தொகையை கோரிக்கை அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தக் கோரினார்.

கடன்தாரர், கூட்டு-கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர் ஆகியோர் உரிய காலக்கெடுவுக்குள் தொகையை செலுத்தாததால், அதிகாரப்பூர்வ அலுவலர், இதன் கீழ்க்கண்ட சொத்து விபரத்தில் கண்டுள்ள சொத்துக்களை "பிரிவு 13(4) - உடன் படிக்க - மேற்சொன்ன விதிகளினுள் விதி 8 ன் படி வழங்கப்பட்ட தனது அதிகாரத்தின் படி உண்மையாக கையகப்படுத்தியுள்ளார்.

பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுவது யாதெனில், பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002ன் விதி 8 & 9 ன் படி, இதன் கீழ்க்கண்ட பட்டியலில் விவாரிக்கப்பட்டுள்ள சொத்தை "இருக்கின்ற இடத்தில்'' ''இருக்கின்ற நிலையில்'' மற்றும் ''இருக்கின்றவற்றுடன்'' என்ற நிபந்தனையில், முடி முத்திரையிட்ட விலைப்புள்ளிகளை பொதுமக்களிடமிருந்து 12.11.2021 மாலை 16.00 மணி வரை வரவேற்பதன் மூலம் விற்பனை செய்யப்படுகின்றது. ஏல விற்பனையில் பங்கேற்க வேண்டுவோர் தங்களது விலைக்குறியீட்டை மூடி முத்திரையிட்ட உறையிலிட்டு, ஒப்புக்கைச் சீட்டுடன் கூடிய பதிவு தபாலில் கீழ்க்கையொப்பமிட்ட நபருக்கு 12.11.2021 மாலை 16.00 மணிக்கோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்குமாறு அனுப்பி வைக்கலாம். 12.11.2021 மாலை 16.00 மணிக்கு பிறகு பெறப்படும் விலைப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும். 12.11.2021 மாலை 16.00 மணி வரை ஒப்புக்கைச்சீட்டுடன் கூடிய பதிவு தபாலில் பெறப்பட்ட முத்திரையிட்ட விலைப்புள்ளிகள் 12.11.2021 மாலை 16.30 மணிக்கு கீழ்க்குறிப்பிட்டுள்ள இடத்தில் திறக்கப்படும். வெற்றி பெற்ற ஏலதாரர் மீத்தொகையை தகவல் பெற்ற தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். விற்பனையானது மேற்சொன்னவாறு மீதித்தொகையை செலுத்தப்பட்ட பிறகே முழுமையடையும்.

வ. எண்	கடன்தாரர் & கூட்டுக்கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி	அடமானம் செய்து பெற்ற கடன் (ரூ)	அடிப்படை விலை (ரூ)	சொத்துரிமை சரிபார்த்தலுக்கான இடம்
1	திரு. சந்திரசேகர் J (கடன்தாரர்) எண். 45, தென்றல் நகர், 4 வது குறுக்கு தெரு, கொடுங்கையூர், சென்னை - 600 118. மேலும் ஷிர்டி சாய் டூரஸ் ட்ராவல்ஸ், எண். 6/44, ஜவஹர் தெரு, கிருஷ்ணமூர்த்தி, சென்னை - 600 118. மேலும் கதவு எண். 9 A முதல் 9 O வரை, ஸ்டீபன்சன் சாலை, பெரம்பூர், சென்னை - 600 011. விஜயா C (கூட்டு கடன்தாரர்) எண். 45, தென்றல் நகர், 4 வது குறுக்கு தெரு, கொடுங்கையூர், சென்னை - 600 118	21.10.2021 ம் தேதியின் படியிலான நிலுவைத் தொகை ரூ. 45,98,152/- (ரூபாய். நாற்பத்து ஐந்து இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து நூற்று ஐம்பத்து இரண்டு மட்டும்) + வருங்கால வட்டி + இதர சட்டரீதியான செலவுகள் + இதரக்கட்டணங்கள் ஆகியன.	ரூ. 33,00,000/- (ரூபாய். முப்பத்து மூன்று இலட்சம் மட்டும்)	சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிட்டெட்., பழைய எண். 1, புதிய எண். 1, 2 வது தளம், கிருஷ்ணன் கோவில் தெரு, ருட்லர்ஸ் லேன், மண்ணடி, (துறைமுகம் காவல் நிலையம் எதிரில்) சென்னை - 600 001
			டேவணித் தொகை : (ரூபாயில்) விலைப் புள்ளியில் 25%	விலைப்புள்ளி திறப்புக்கான இடம் சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிட்டெட்., சுந்தரம் டவர், எண். 46, ஒயிட்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை - 600 014 விலைப்புள்ளி திறப்பு தேதி : 12.11.2021 @ 16.30

சொத்து விபரம் : சென்னை மாவட்டம், புரசைவாக்கம் - பெரம்பூர் தாலுக்கா, பெரம்பூர் கிராமம், (க்ராஸ்மியர் கிராமம்) T.S. எண். 503/1, ப்ளாக் எண். 26 ல் அமையப்பெற்ற மொத்த பரப்பு 2 ஏக்கர் 83 சென்டில் உள்ள 265 சதுர அடி பிரிபடாத பங்கு சொத்துடன் கூடிய கதவு எண். 9 'A' முதல் 9 'O' வரை, ரேடியன்ஸ் எம்பயர், ப்ளாக் E, 7 வது தளத்தில் உள்ள 388 சதுர அடி பயன்பாட்டு பரப்புடனான (600 சதுர அடி கட்டிட மேற்பரப்பு கொண்ட) எண். E701 யைக்கொண்ட அபார்ட்மெண்ட் மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் & உடைமைகள் முழுவதும். எல்லைகளாவன - வியாசர் நகர் வீட்டுக்கு - வடக்கு, ஸ்டீபன்சன் சாலைக்கு - தெற்கு, தனியார் வீடுகளுக்கு - கிழக்கு, திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) & ஸ்டீபன்சன் சந்துக்கு - மேற்கு. இச்சொத்து, மத்திய சென்னை பதிவு மாவட்டம், புரசைவாக்கம் சார் பதிவு மாவட்ட எல்லைக்குள் அமையப்பெற்றுள்ளது.

குறிப்பு : வாங்க விருப்பமுள்ளவர்கள் ஆவணங்களை சரி பார்த்து சொத்துரிமையை பொருத்த மட்டில் முழு திருப்தி ஏற்பட்டதன் பேரில் ஏலத்தில் பங்கேற்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சொத்துரிமை தொடர்பாக ஏதேனும் வில்லங்கம் ஏற்படுமாயின், விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட பிறகு தொகை திருப்பி தரப்பட மாட்டாது.

திரு. சந்திர சேகர் J அவர்களின் கடன் கணக்கு எண். PRS20190032 - ன் சொத்து விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு www.sundaramhome.in/uploads/files/sale_notice/prs20190032.pdf யை தயவு கூர்ந்து பார்வையிடவும்.

தேதி : 21.10.2021 — சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிட்டெட் - க்காக அதிகாரப்பூர்வ அலுவலர்

தெற்கு ரயில்வே

பொது அறிவிப்பு

கூடுவாஞ்சேரி – தாம்பரம் பிரிவில் 3வது தடத்தில் வேக சோதனை ஓட்டம்

தெற்கு ரயில்வேயின் கூடுவாஞ்சேரி – தாம்பரம் ரயில் நிலையங்கள் இடையே 3வது மாற்றியமைக்கப்பட்ட ரயில் தடத்தில் அமைந்துள்ள ரயில்வே பாதைகளையும் கட்டிடங்களையும் பயன்படுத்துபவர்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், ரயில்வே பாதுகாப்பு ஆணையர், தெற்கு வட்டம், பெங்களூரு அவர்கள், 21.10.2021 வியாழக்கிழமை அன்று காலை 11.30 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை ஒரு சிறப்பு ரயிலைப் பயன்படுத்தி வேக சோதனை ஓட்டம் மேற்கொள்வார்கள். அங்கீகாரம் பெறாத எந்த ஒரு நபரும் ரயில்வே தடங்களை நெருங்கவோ அங்கு வேலை பார்க்கவோ கூடாது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

தலைமைப் பொறியாளர் / கட்டுமானம் / கிழக்கு / சென்னை எழும்பூர்

TAMILNAD MERCANTILE BANK LTD
(Regd.office at 57, V.E.Road, Thoothukudi)
CHENNAI MOUNT ROAD BRANCH
738, Anna Salai, Ground Floor, Near District Central Library, Chennai – 600 002. E-mail : chennai_mountroad@tmbank.in

NOTICE

The Locker facility availed by the below mentioned customers at the branch of our bank have not been operated for a long time more than 3 years and rent arrears also unpaid. The correspondence in this regard, to the address given by you at the time of opening locker faciliy have been undelivered and returned with the reason "Party shifted / No such person". Further, we are unable to contact you in person.

If you have failed to set right the deficiency of your locker facility within 05.11.2021. We will be constrained to break open the locker without any further intimation. This is the final intimation in this regard.

1. Mr.D.Veerab